5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 259 முதல் 285 வரையிலான 27 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில், தீய சக்திகள் எங்கிருந்தாலும் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தி, மக்களைக் காப்பாற்றிய வீரத் தாய். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 171 முதல் 185 வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.